பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞூ சித்திரை 20 ஆம் வெள்ளிக்கிழமை [03—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 15

# மட்டக்களப்பு நகர வீதிகளில்

# தலையின்றி தமிழர் சடலங்கள்

## மக்கள் பதற்றம்; பரீட்சை குழம்பியது

யாழ்ப்பாணம், மே 3

மட்டக்களப்பு நகரப் பகுதியில், தமிழர்கள் தொடர்ந்தும் மர்மமான முறையில் கொலை செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

நகர வீதிகளில் தமிழரின் சடலங்கள், தலை இல்லாமல் வெறும் முண்டங்களாக போடப்படுகின்றன.

கடந்த ஒரு சில நாட்களில் மட்டும் தலை இல்லாத முண்டங்கள் பன்னிரண்டு, நகர வீதிகளில் காணப்பட்டதாகவும் —

நேற்றுக் காலை மட்டும் தலை இல்லாத சடலங்கள் நான்கு போடப்பட்டிருந்ததாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினரில் ஒரு குழுவே இந்தக் கொலைகளை மர்மமான முறையில் செய்து வருவதாக சந்தேகிக்கப்படுவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

தலை இல்லாத முண்டங்கள் வீதிகளில் போடப்படும் பயங்கரத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் மிகுந்த பதற்றத்துடன் வாழ்வதாக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மடு அகதிகள் பங்குபற்றிய எழுச்சிமிகு மேதினப் பேரணி

யாழ்ப்பாணம், மே 3

மே தினத்தன்று மன்னார், மடு அகதி முகாம் மக்கள் எழுச்சிமிகு பேரணி ஒன்றை நடத்தினர்.

சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்தப் பேரணியில் பங்குபற்றினர்.

பெரியபண்டிவிரிச்சான் பாடசாலையிலிருந்து ஆரம்பமான பேரணி மடு உதவி அரச அதிபர் பணிமனையில் முடிவுற்றது

மாணவர்கள், ஆசிரியர்கள், அரசஊழியர்கள், வர்த்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறுப் பகுதிகளில் மேதினம் கடும் குண்டு வீச்சு

### காலை முதல் இரவு வரை நடந்தது

யாழ்ப்பாணம், மே 3

மே தினத்தன்று மணலாறுப் பகுதியில் பல இடங்களிலும் காலை 8-30 மணி முதல் இரவு 10-00 மணி வரை தொடர்ச்சியாக விமானக் குண்டு வீச்சுகள் இடம்பெற்றன.

சீனச் சகடை விமானம், அவ்ரோ, ஹெலி ஆகியன மாறி, மாறி தாக்குதல்களை நடத்தின.

ஆண்டான்குளம், கருநாட்டாங்கேணி, நாயாறு, செம்மலை, அளம்பில், குமுழமுனை, தங்கபுரம், தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்கவில்லை (இ)

## யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள் அனைத்தும் 20 ஆம் திகதியே ஆரம்பம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 20 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சில பாடசாலைகளில் ஜி. சி. ஈ. [உயர்தர] பரீட்சை நடைபெற்று வருவதாலும், இன்னும் சில பாடசாலைகளில் அகதிகள் தங்கியிருப்பதாலும், காரைநகர் மற்றும் தீவுப் பகுதிகளில் சுமுக நிலை இல்லாததாலுமே பாடசாலைகளைத் திறக்கும் திகதி பின்போடப்பட்டதாக கல்விப் பணிப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 2 அதிகாரிகள், 6 சிப்பாய்கள் திருமலை தாக்குதலில் மரணம்

கொழும்பு, மே 3

திருகோணமலைப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதல் ஒன்றில் இரு படை அதிகாரிகள் உட்பட 8 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் இன்னும் பத்துப் படையினர் சாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் இது என்று சுயாதீன செய்திகள் தெரிவித்தன. (ஏ-எ)

## படையினரின் சூட்டுக்கு சரவணைவாசி மரணம்

### நேற்றும் ஷெல் வீச்சு நடந்தது

யாழ்ப்பாணம், மே 3

சரவணை, சின்னமடுப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை அதேபகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இவரது சகோதரியான பிரகாசி என்பவர், சடலத்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று பெரிய முகாம்கள்

### இடம் ஒதுக்கும் வேலை ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தோருக்கென மூன்று பெரும் நிரந்தரமுகாம்களை அமைக்கும் முயற்சியின் முதற்கட்டமாக மூன்று இடங்களைத் தெரிவு செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இத்தகவலை யாழ். பதில் அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வலி வடக்குப் பிரதேசம், தீவுப் பகுதிகள், ஆனையிறவுப் பகுதி என பல்வேறு இடங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களின் மத்தியில் திக்குத் திக்காக சிறு சிறு முகாம்களில் தங்கி உள்ளனர்.

ஒன்றில் ஆயிரம் குடும்பங்கள் தங்கியிருக்கக்கூடிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப ... பள்ளிக்கூடத்துப் பொடியன் பாடு இன்னும் இரண்டு கிழமைக்கு கொண்டாட்டம் தான் என்டு சொல்லுங்கோ......!

## வவுனியாப் பகுதியில் நேற்று கடும் மோதல் சம்பவங்கள்

### பேயாடிக்கூழாங்குளத்திலும் சண்டை

யாழ்ப்பாணம், மே 3

வவுனியாப் பகுதியில் நேற்றுப் பகல் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றன.

காலை 8.30 மணியளவில் பூந்தோட்டம், தாண்டிக்குளம் பகுதிகளிலிருந்த இராணுவத்தினர் பொதுமக்களைக் கேடயமாகப் பாவித்து இரு பிரிவுகளாக சாந்த சோலையூடாக முன்னேறினர் என்றும் —

இந்த இராணுவத்தினர்மீது பேயாடிக்கூழாங்குளத்தில் வைத்து காலை 10.15 மணி முதல் 11 15 மணி வரை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மோதல் நடந்த சமயம் இராணுவத்தினருக்கு உதவியாக மூன்று ஹெலிகள் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தன.

இந்த மோதலின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

தற்போது படையினர் பேயாடிக்கூழாங்குளத்தில் நிலைகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## இன்று தபால் விநியோகம்

'லங்கா சிறி' கப்பலில் வந்து காங்கேசன்துறை தபால் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த- குடா நாட்டுக்கான [வெளியூர்] தபால்கள் அடங்கிய 155 பொதிகளும் நேற்றுக் காலை யாழ். தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன.

தரம் பிரிக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின.

இன்று தபால்கள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வழமையை விட இந்தத் தடவை வந்துள்ள பொதிகளில் வெளிநாட்டுத் தபால்கள் குறைவாக இருப்பதாக தபால் பகுதியினர் தெரிவித்தனர்.

இதேவேளை—

[4 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**வேப்பெண்ணெய்**

விளக்கெரிக்க, மருத்துவ தேவைக்கு, பயிர் பீடைகளை விலக்க வேப்பெண்ணெய் சுத்தமானது. அரைப்போத்தல் ரூபா 45/- மட்டுமே. [போத்தலுடன்] மில்க்வைற் [சி-4960]

**சனி நீராடு**

ஒலிவ் விநாயகப் பவுடர் பாவித்து வாராவாரம் எண்ணெய் முழுகிவர கண், சிரசு உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது சுகவாழ்வு கிட்டுகிறது. பைக்கட் ஒன்று ரூ. 1-50 மட்டுமே. மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி-4963]

**ஆங்கில வகுப்புகள்**

ஆங்கில மொழியை கசடறக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு அவரவர்களின் தராதரத்திற்கேற்பவும், வசதிகளுக்கேற்பவும் குறைந்த கட்டணத்தில் கூடிய விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. By Manjula Balasingam 21/2, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். [16527]

**மணமகள் தேவை**

கனடாவில் நற்பதவியும், 7 இல் செவ்வாயுடன் சந்திரனும் உள்ள 30 வயது இந்து மணமகனுக்கு சிரகபாவம் குறைந்த, படித்த மணப்பெண் தேவை. குறிப்பு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 310, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [16644]

**தனிப்பட்ட வகுப்புகள்**

G. C. E. A/L பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் விசேஷமாக பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு: R. பாலா B.Sc. (Cey) 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [16661]

## நிவாரணம் பெற சென்றுதோட்டை இழந்த சிறுமி

நிவாரணம் பெறச் சென்ற சிறுமி ஒருவரின் தோடுகள் காணாமற்போயின.

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் அண்மையில் வழக்கம்பரை அம்மன் கோவிலடியில் வைத்து நிவாரணம் வழங்கியது.

இதனைப் பெறுவதற்காக நெரிசல்பட்டு நின்ற வேளையிலேயே இச்சிறுமி தனது தோடுகளை இழந்தார் [இ-100]

---

Personal
**New Science Centre**
Ellilakam Front Lane, Jaffna.

**91 A/L துரித மீட்டல் வினா விடை வகுப்புக்கள்**

ZOO - 6-30 a m.
PHY. - 7 30 a m
CHE. - 8-30 a m
BOT. - 9 30 a m
PURE / APP - 9-30 a m

- விவரங்கள் நேரில் -

[சி-4907]

---

# நவாலி வை. எம். சீ. ஏ.

நவாலி வை. எம். சீ. ஏ யின் தையல் பயிற்சி வகுப்புக்கள் 4-5-91 காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும். பயிற்சியை முடித்து சான்றிதழ் பெறாதோரும், புதியவர்களும் கலந்துகொள்ளலாம். விவரங்களுக்கு காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். [4046]

---

# A/L புதிய பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 7-30 | BOT. | நுண்ணங்கி உலகம் | — திரு. ஸ்ரீகரன் |
| 8-30 | BOT. | உருவவியல் | — திரு. ஸ்ரீகரன் |
| 1-00 | PHY. | ஒளியியல் | — திரு. அருள்தாஸ் |
| 1-00 | CHE. | பௌதிகவியல் | — திரு. சிவசோதி |
| 2-00 | PHY. | மின்னியல் | — திரு. அருள்தாஸ் |
| 2-00 | CHE. | பொது | — திரு. சிவசோதி |
| 8 00 | CHE. | சேதன | — திரு. சிவசோதி |

## ஆரம்பம்: 04-05-1991

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16658]

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில்: | | அந்நியர் அழிப்பு: |
|---|---|---|
| 02 | | 25 |
| — | | — |
| 07 | | 04 |
| — | | — |
| 1971 | | 1989 |



## அமரர் முருகையா பிரபாகரன்

திதி:- 03 - 05 - 1991

எங்கள் தவச்செல்வமாக, குடும்ப தீபமாக இருந்த எம் செல்வமே! துயரத்தை அறிந்ததில்லை, துன்பத்தை புரிந்ததில்லை, வேதனையை உணர்ந்ததில்லை இவையெல்லாம் வந்ததுவே. இன்று உங்கள் பிரிவால் எங்கள் செல்வம் பட்ட சித்திரவதைகளை எல்லாம் எங்கள் நெஞ்சம் மறக்குமா? அம்மா, அம்மா என கத்திக் கதறி உமது உயிர் போகும் போது உமது அம்மா அருகில் இல்லையடா; உமது பெற்றோர் உமது அருகில் இருந்திருந்தால் எம் செல்வத்திற்கு இக் கதியில்லையடா. ஈராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவு எம்மை விட்டு நீங்காதையா.

உங்கள் நினைவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அம்மம்மா, ஐயா, உறவினர்கள்,
நண்பர்கள்.

இ3றசர் லேன்,
தெல்லிப்பளை.

[16653]

---

# சமூகத்தீர்வே இந்தியாவின் நிலைப்பாடு

மணிலா மே 3

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் ஊறு ஏற்படா வண்ணம், அந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண வேண்டும். இதுவே இந்தியாவின் கொள்கை என்று இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்திருக்கிறார்:

பிலிப்பைன்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் திரு. வெங்கட்ராமன் மணிலாவில், செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். [அ-த]

---

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம்
தாவடி

நூல் வெளியீடு:

## "பாபா சொன்ன கதைகள்"

இடம்: நிலைய மண்டபம்
பிள்ளையார் கோவிலடி, தாவடி.

காலம்: 04-05 1991 சனிக்கிழமை மாலை 3மணி

அனைவரும் கலந்து கொள்க!

நூலின் விலை ரூபா 25/-

[16649] [இருபைத்தைந்து]

---

# C. C. A.

[கலை, வர்த்தகக் கல்லூரி]

## A/L 92 புதிய பிரிவு

ஆரம்பம்:- 04 - 05 - 1991

## A/L 91 DAY CLASSES

ஆரம்பம்:- 06 - 05 - 1991 காலை 8-00 மணி

**ஆசிரியர்கள்:**

| | |
|---|---|
| பொருளியல் | - உதயன் |
| கணக்கியல் | - ஸ்ரீ |
| வர்த்தகம் | - இரட்ணம் |
| அளவையியல் | - சயந்தன் |
| இந்துநாகரிகம் | - அருள்நங்கை |
| தமிழ் | - மீரா |
| அரசியல் | - டியூபேப் |
| புவியியல் | - குணராஜா |
| கிறிஸ்தவம் | - அருட்சகோதரர் |

[சி-4912]

---

# S. L. P. S.

## இலங்கை அதிபர்கள் சேவை

தரம் 1, 2, 3 போட்டிப் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 04 - 05 - 1991 8 30 மணி

பாடங்கள்: கல்விக் கொள்கையும், நிர்வாகமும், பொது அறிவு, கிரகித்தல்.

முழுக் கட்டணம்: 250/-

★ கல்விச் சேவை விரிவுரையாளர்கள்:
★ பாடக் குறிப்புகளும், மாதிரி வினா-விடைகளும் இலவசம்.
★ Limited Number in Each Class

**வணிக முகாமைத்துவக் கல்லூரி**
**(School of Business Administration)**
16, 3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

[சி-4910]

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கந்தையா நாகலிங்கம்

[நாகேஸ்வரி வித்தியாசாலை ஸ்தாபகரும், இளைப்பாறிய அதிபரும்]

தோற்றம்: 16 - 10 - 1909 மறைவு: 27 - 04 - 1987

திதி: 03 - 05 - 1991

அவனியில் பிறந்த மாந்தர்
அனைவது நிஜத்தில் உண்டு - ஆனால்
நான்கு ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
பிரிவு சகிக்க முடியவில்லையே ஐயா!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொலிஸ் நிலைய-
அருகாமை,
சுன்னாகம்.

[4047]

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## நாகலிங்கம் சிவசோதிநாதன்

தோற்றம்: 1936 - 06 - 02 மறைவு: 1990 - 05 - 13

திதி: 03 - 05 - 1991

மண்ணுலக வாழ்வு போதுமென்று
விண்ணவன் உங்களை அழைத்து
ஓராண்டு கடந்தாலும் - நீங்கள்
எம்மை விட்டு அகலவில்லை!

மனைவி, மக்கள்,
தாய், சகோதரர்.

நாகேஸ்வரி வித்தியாசாலை-
அருகாமை,
சுன்னாகம்.

[4048]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நயவஞ்சகத் தொடர்பு உண்டு!

கடந்த இரண்டு நாட்களாக, அரசாங்கப்படையினர், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச்சட்டத்தை நடைமுறைப்படுத்தித் தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாம் இராணுவத் தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், தமிழ் மக்களில் கரிசனை உள்ளவர்கள் போலக் காட்டிக்கொண்டு, குறுகிய நேர முன்னறிவித்தலுடன் அவர்களை இடம்பெயர்ந்து செல்லுமாறு கேட்பது இப்போது படையினரின் வழக்கமாகிவிட்டது.

அது ஒரு புறமிருக்க —

மக்களை இடம்பெயருமாறு ஹெலியில் இருந்து போடும் துண்டுப்பிரசுரங்களில், குறிப்பிட்ட இடங்களில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்வதே படையினரின் வழக்கம்.

ஆனல் முல்லைத்தீவு மாவட்டத்தில் வானத்திலிருந்து போடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில்—

குமிழமுனை, ஆண்டான்குளம், செம்மலை, அளம்பில், தண்ணிமுறிப்பு, நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களை வவுனியாவுக்கு இடம்பெயருமாறு விசேடமாகக் குறிப்பிட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பெரும் நயவஞ்சகமும், சதியும் உள்ளதாகக் கருத வேண்டி உள்ளது வவுனியாவுக்கு இடம்பெயர வைத்து, தமிழ் மக்களை பணயக் கைதிகளாக வைத்திருக்கும் ''பழைய'' திட்டத்தை - ரஞ்சன் காலத்துத் திட்டத்தை - அமுல் செய்வது ஒன்று. தமிழர்களை மூலையில் முடக்கிவிட்டு, அப்பகுதிகளில் சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றுவது இதன் பிரதான நோக்கமாக இருக்கலாம் என்பது அடுத்தது.

குமுழமுனை தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான பகுதிகள் மணலாறுப் பிரதேசத்துக்கு அண்மித்த ஊர்களாகும். மணலாறை ''வெலி ஓயா'' ஆக்கி அதனை ஒரு தனி மாவட்டமாக்க அரசும், படைகளும், சிங்களப் பேரினவாதிகளும் முயன்று வருவது தெரிந்ததே.

கிழக்கின் திருகோணமலையையும், வடக்கின் முல்லைத்தீவையும் தொடுக்கும் இந்தப் பகுதியை, நிலத்துண்டு (Strip) சிங்களப் பிரதேசமாக்கி விட்டால் வடக்கு-கிழக்கு இணைப்பு, தமிழர் தாயகம் என்பவற்றுக்கு ஆப்பு வைத்து விடலாம் என்பது அந்த முத்தரப்பாரதும் எண்ணம் - நயவஞ்சகத் திட்டம்.

வன்செயல்களை, மோதல்களை, யுத்தங்களை வரப்பிரசாதமாகக் கருதி, தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடத்தி மண் அபகரிப்புச் செய்வதில் அரசுகள் பெரிதும் கைதேர்ந்தவையாயிற்றே!

முல்லைத்தீவின் காட்டுப் பிரதேசங்களில் பகுதி பகுதியாக தாக்குதல் நடத்தப்படுவதாகக் கூறி, அங்குள்ள வளமான காடுகளை குறிப்பாக மணல் ஆறுப் பிரதேசத்தில் உள்ள காடுகளை இராணுவத்தினர் வெட்டித் துப்புரவாக்கி வருவதற்கும் குமிழமுனை, கொக்குத்தொடுவாய் வரையான பகுதிகளில் போடப்பட்ட துண்டுப் பிரசுரத்துக்கும் நிறையத் தொடர்பு உண்டு என்று ஊகிக்கவேண்டியுள்ளது.

## பேச்சு நடத்த தொண்டமான் அழைப்பு

கொழும்பு, மே 3

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் பேச்சுக்களை நடத்த முன்வர வேண்டும்.

அமைச்சர் எஸ் தொண்டமான் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். ஹட்டனில் நடந்த மேதின விழாவில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். [இ-எ]

# சூறாவளியால் 1லட்சம் பேர் வரை இறந்திருக்கலாம் என்று அச்சம்

## பங்களாதேஷில் மீட்பு வேலைகள் துரிதம்

டாக்கா, மே 3

கடந்த திங்கட்கிழமை வீசிய சூறாவளி காரணமாக பங்களாதேஷில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சமாக அதிகரிக்கும் என்று இப்போது அஞ்சப்படுகிறது.

சிட்டகொங் துறைமுக நகரின் அருகில் உள்ள தீவு ஒன்றில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 25 ஆயிரம் என்று பங்களாதேஷ் தகவல் அமைச்சர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் இதுவரை சுமார் 3000 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பங்களாதேஷின் ஜனாதிபதி புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்படி உலக நாடுகளைக் கோரியுள்ளார். [இ-த-ஏ]

## காரைநகர் அகதிகளுக்கு வழக்கம்பரையில் முகாம்

காரைநகர்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழக்கம்பரை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இரண்டு முகாம்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

காரைநகரில் இருந்து 5500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வந்துள்ளனர் அவர்கள் தங்கவே இந்த முகாம்களை அமைக்க ஊர்காவற்றுறை, சங்கானை உதவி அரச அதிபர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். [இ-3]

## கம்போடியாவில் யுத்த நிறுத்தம்

கம்போடியாவில் நேற்று முதல் தற்காலிக யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்தது.

12 ஆண்டுகளாக அங்கு மூன்று கெரில்லாக் குழுக்கள் கம்போடிய அரசப்படையை எதிர்த்து யுத்தம் செய்து வந்தன.

இப்போது தற்காலிக யுத்த நிறுத்தத்துக்கு அரசும் மூன்று கெரில்லாக்களும் இணங்கியுள்ளன. [இ-எ]

## ஆசிரிய இடமாற்றங்கள் ஒத்திவைக்கப்பட்டன

கொழும்பு, மே 3

ஆசிரிய இடமாற்றங்கள் அனைத்தும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

புதிய இடமாற்றத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதன் பின்னரே ஆசிரிய இடமாற்றங்கள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## தொழிற் சங்கங்கள் மாஸ்கோவில் மேதினம்

மாஸ்கோ, மே 3

மாஸ்கோவில் மே தினம் முதன் முறையாக தொழிற் சங்கங்களால் கொண்டாடப்பட்டது.

இதுவரை காலமும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியே மே தினத்தைக் கொண்டாடி வந்தது

நேற்று முன்தினம் தொழிற் சங்கங்கள் நடத்திய மே தின விழாவில் ஜனாதிபதி கோர்பச்சேவும் கலந்து கொண்டார்.

சோவியத் அரசு செயற்படும் விதத்தை தொழிற் சங்கத் தலைவர்கள், ஜனாதிபதி கோர்பச்சேவ் முன்னிலையிலேயே வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள். [இ-எ]

## தமிழகத் தேர்தலின்போது ஈழ அகதிகள் 'உள்ளே'

சென்னை, மே 3

தமிழ்நாடு மாநிலத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளை இம்மாதம் 25, 26 ஆம் திகதிகளில் முகாம்களை விட்டு வெளியே வரத் தடை விதிப்பது பற்றி மாநில அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இத்தகவலை மாநில அகதிகள் மறுவாழ்வுத்துறை விசேட ஆணையாளர் சி எம். இராம்தாஸ் நேற்று வெளியிட்டார்.

தமிழகத்தில் சட்டசபை மற்றும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பு இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்பது தெரிந்ததே.

தமிழ்நாடு தேர்தலில் இலங்கைத் தமிழ் அகதிகள் தலையிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று, அவர்களுக்குக் கூறப்பட்டிருப்பதாக சிறப்பு ஆணையாளர் சி எம் இராம்தாஸ் மண்டபம் அகதி முகாமுக்கு நேற்றுச் சென்றிருந்தபோது செய்தியாளரிடம் தெரிவித்தார். [இ-எ]

## "பிளாக் கோப்ரா" இயக்கம் உரிமை கோருகிறது

கொழும்பு, மே 3

மட்டக்களப்பு தொலைபேசித் தொடர்பு நிலையத்தைச் சேர்ந்த சிவஞானம் சற்குணநாதன் [37 வயது] கொலைக்கு இயக்கம் ஒன்று உரிமை கோரி உள்ளது.

''பிளாக் கோப்ரா'' [கருநாகம்] என்ற இயக்கமே உரிமை கோரி இருக்கின்றது.

அரசாங்கத்தின் ''பச்சைப் புலிகள்'' இயக்கத்தைப் போன்ற ஓர் இயக்கமாக இது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது

சற்குணநாதன் கடந்த மாதம் 24 ஆம் திகதி தொலைத் தொடர்பு நிலையத்தில் இருந்து கடத்திச் செல்லப்பட்டார்.

அவரது சடலம் சாக்கு ஒன்றினுள் கட்டப்பட்ட நிலையில் சென்ற 23 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

சடலத்தின் அருகில் 'பிளாக்கோப்ரா'' வின் குறிப்பு ஒன்று வைக்கப்பட்டிருந்தது

கொலையுண்ட சற்குணநாதன் மட்டக்களப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி கரிகாலனின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

## ஊழியர் சேமலாப நிதி ஒய்வூதியமாக மாற்றம்

ஊழியர்சேமலாபநிதித் திட்டத்தை தொழிலாளர் ஓய்வூதியத்திட்டமாக மாற்றுவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

இதன் கீழ் ஒரு ஊழியருக்குக் குறைந்தது 750 ரூபாவை மாதாந்தம் ஓய்வூதியமாகக் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது.

ஆண்கள் 55 வயதிலும், பெண்கள் 50 வயதிலும் இளைப்பாற முடியும்.

வாழ்க்கைச்செலவின் அடிப்படையில் காலத்துக்குக்காலம் ஓய்வூதியத் தொகை மாற்றமடையும்.

ஊழியர் சேமலாபநிதித்திட்டத்தின்கீழ்வரும் தொழிலாளர் அனைவரும் புதிய திட்டத்தில் சேர்ந்து கொள்வது அவசியமாக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின் பலனாக மேலதிக கொடுப்பனவுகள் வசூலிக்கப்பட மாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது. [இ-எ]

### ஓமந்தையில் காயமடைந்தவர்கள்

ஓமந்தையில் திங்களன்று இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வி. அருச்சுனன் [வயது 32] என்பவரே இவர் ஆவார். இவருடைய வீடும் சேதமடைந்துள்ளது. [இ-15]

## காற்றினால் வாழைகள் குலைகளுடன் சரிகின்றன

யாழ்ப்பாணம், மே 3

காற்றின் வேகத்தால் யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் வாழைகள் அழிந்து வருகின்றன.

வாழைகள் குலையுடன் சரிவதால் வாழைப்பழத்தின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

கிலோ 8 ரூபா, 10 ரூபா என விலைப்பட்ட வாழைப்பழம் தற்போது 4 ரூபா வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர் பகுதிகளில் உள்ள வாழைத்தோட்டங்களே காற்றினால் பெரும் அளவில் அழிந்துள்ளன.

இதனை அடுத்து எஞ்சி உள்ள வாழைகளின் இலைகளை வெட்டி வாழைமரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் தோட்டச் சொந்தக்காரர் ஈடுபட்டுள்ளனர். [இ-68-154-15]

### திருவாசகம் முற்றோதல்

நாட்டில் அமைதி சமாதானம், சுபீட்சம் வேண்டியும், தமிழீழ விடுதலை புலிகள் அற்போதைய யுத்தத்தில் வெற்றி பெற வேண்டியும் எதிர்வரும் ஞாயிறு காலை 6-00 மணிக்கு சுண்டிக்குளி விதானையார் வீதியில் உள்ள திருவாசக சுவாமிகள் பணிமனையில் திருவாசகம் முற்றோதல் நடைபெற உள்ளது [இ-30]

### வெடிக்காத ஷெல்

சுன்னாகம் முத்துக் கிருஷ்ணர் வீதியில் விழுந்து வெடிக்காத ஷெல் ஒன்று, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது [இ 89]

# வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கே இப்போது தீர்வு தேவைப்படுகிறது

## காலிமுகத்திடல் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, மே 3

நாட்டின் முக்கிய பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டன. வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு மட்டுமே இன்று தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் நடந்த ஐ[illegible] மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது;

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வு காண முடியாது. இதனை அனைவருமே ஏற்றுக்கொண்டுள்ளனர். சமாதானப் பேச்சுக்களை நடத்துவதன் மூலமே [illegible] வேண்டும். அமைதிப் பேச்சுக்களை நடத்துவதற்கான அடிப்படையை நாம் அறிவித்து விட்டோம்.

இந்தியாவுடனான கருத்து வேறுபாடுகளுக்கு நாம் தீர்வு கண்டுள்ளோம்.

நமது நாட்டின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க இந்தியா எமக்கு உதவியளித்தது

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு சண்டையில் 1, 282 படையினர் பலி!

## மேலும் 480 பேரின் கதி தெரியாது!!

கொழும்பு, மே 3

வடக்கு - கிழக்கில் கடந்த 11 மாதங்களாக நடந்துவரும் சண்டையில் ஆயிரத்து 282 படையினர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பாதுகாப்புத் துணை அமைச்சு செயலாளரும் விமானப்படையின் முன்னாள் தளபதியுமான வோல்டர் பெர்னாண்டோ வாராந்திர செய்தியாளர் கூட்டத்தில் வெளியிட்டார்.

480 பாதுகாப்புப் படையினர் சண்டையில் காணாமற் போயுள்ளனர் என்றும் அவர் சொன்னார். [ஓ-எ]

# பாலத்தில் டிரக்டர் கவிழ்ந்து 3 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, மே 3

மட்டக்களப்பு-வலையிறவுப் பாலத்தில் கடந்த திங்கட் கிழமை மாலை விமானப் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரம் [டிரக்டர்] ஒன்று கவிழ்ந்தது. அப்போது மூன்று படையினர் உயிரிழந்தனர்.

அவர்களில் ஒருவரின் சடலம் கடந்த புதன்கிழமை வாவியில் இருந்து மீட்கப்பட்டது ஏனைய இரு படையினரின் சடலங்களைத் தேடும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன.

# இடம்பெயர்ந்தோருக்கு இரு இடங்களில் நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 3

வேலணை உதவி அரச பிரிவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு [உறவினர் வீடுகளில் தங்கி இருப்பவர்கள் உட்பட] யாழ். நகரில் இரு இடங்களில் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

வேலணை ப. நோ. கூ. சங்க எல்லைக்குட்பட்டவர்கள் யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையார் ஸ்ரோர்ஸ் கட்டடத்தில் இயங்கும் தற்காலிக வேலணை ப. நோ. கூ. சங்கத்திலும்—

புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் எல்லைக்குட்பட்டவர்கள் ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகில் உள்ள மணியம் கட்டடத்தில் இயங்கும் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்திலும் உலர் உணவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ 167]

## 'பரா' வெளிச்சம்: தொழிலாளி மரணம்

சுழிபுரம், மே. 3

கடற்படையினர் திடீரென்று ஏவிய 'பரா' வெளிச்சத்தைப் பார்த்த கடற் தொழிலாளி ஒருவர் அதிர்ச்சியடைந்து விழுந்து அவ்விடத்திலேயே மரணமானார்.

காரைநகருக்குச் சமீபமாக சுழிபுரத்தில் உள்ள புளியந்துறைக்கு மீன் பிடிக்கச் சென்ற வேளை, சுழிபுரம் இறாத்தலடியைச் சேர்ந்த கந்தையா கனகசபை [55 வயது] என்பவரே இவ்வாறு மரணமானார். [ஓ-28]

# திருமலை பச்சனூரில் 30 அகதிகள் கைது

யாழ்ப்பாணம், மே 3

கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை திருகோணமலை மாவட்டம், பச்சனூர் அகதி முகாமில் இருந்த பொதுமக்கள் 25 பேரை படையினர் கைது செய்தனர். அவர்களில் மூவர் மட்டும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 27 ஆம் திகதியும் அதே அகதி முகாமில் மேலும் 5 பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர்.

அருளம்பலம் சிவசுப்பிரமணியம் [50 வயது], தம்பையா ஜெயராஜா [30 வயது], தம்பையா லலிதராஜா [23 வயது], மா. அருந்தவராஜா [28 வயது], விநாயகமூர்த்தி [30 வயது] ஆகியோரே அந்த ஐவரும் ஆவர்.

இதேவேளை கடந்த வியாழன்று 58 ஆம் கட்டையில் வைத்து சின்னத்துரை வாமதேவன் என்பவர் உட்பட ஐவர் படையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ]


## உடுப்பிட்டியில்

## ஸ்ரீ வாணி அச்சகம்

முன்பு அச்சுவேலியில் இயங்கி வந்த அச்சகம் தற்போது இலக்கணாவத்தை, உடுப்பிட்டியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

சகலவிதமான அச்சுவேலைகளும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

[16655]


## கண்ணீர் அஞ்சலி

### திரு. ஆர். முத்துக்குமாரு அவர்கள்

ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி

எமது கல்லூரியில் பல வருடங்கள் பணியாற்றி 01 05-1991 இல் திடீரென எம்மைவிட்டுப் பிரிந்த எமதன்பு ஆசிரியருக்கு எம் அனைவரின் கண்ணீர் அஞ்சலிகள்.

நெஞ்சம் கலங்கி. பிரிவால் துயருறும்;
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
(கொக்குவில் இந்துக் கல்லூரி)

[16663]

# வவுனியாவில் ஊரடங்கு

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு, வவுனியா நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றுக் [வியாழன்] காலை 10 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை, ஆண்டான்குளம், அளம்பில், கொக்குத்தொடுவாய், கொக்குளாய், நாயாறு பகுதிகளில் கடந்த புதன் காலை அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் தொடருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. [ஓ எ]

# வலந்தலையில் மின்வெளிச்சம்

சுழிபுரம், மே 3

காரைநகர் வலந்தலைச் சந்தியில் இரவில் பிரகாசமான ஒளி தென்படுகிறது.

அண்மையில் தகர்க்கப்பட்ட பொன்னாலை பாலத்தை நோக்கியே மின்ஒளி பாய்ச்சப்படுவதாகவும் தெரியவருகிறது.

இரவில் வாகனங்களின் வெளிச்சங்களும் இப்பகுதியில் தென்படுகின்றன. [ஓ-28]

# நாளை வெளிவரும்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' இதழின் 22 ஆவது இதழ் வெளியீடு நாளை வெளிவரும்.

மார்ச் மாதம் சிலாவத்துறை ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மீது 4 நாட்கள் நடத்தப்பட்ட தாக்குதல்களின் முழுவிபரம்-

பேச்சுவார்த்தை — யுத்த நிறுத்தம் என்று கூறி வரும் ஸ்ரீலங்கா அரசின் உண்மையான உள்நோக்கம் என்ன என்பது பற்றிய தலையங்கக் கட்டுரை —

கொழும்புக்குச் செல்பவர்களுக்கு ''பாஸ்'' முறை அமுல்படுத்தப்பட்டது ஏன் என்பதற்கான விளக்கக் கட்டுரை — போன்றவை உட்பட பல விடயங்கள் இந்த வெளியீட்டில் இடம் பெறுகின்றன. [ஓ]

## படையினரின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைவிட்டு விட்டு, அங்கிருந்து தப்பி வந்து விட்டார்.

வைத்தியோன் பிள்ளை [74 வயது] என்ற அந்த வயோதிபர் நெஞ்சில் சூடு பட்டு அவ்விடத்திலேயே உயிரிழந்து விட்டார் என்று அவரின் சகோதரி கூறினார்.

இதேவேளை—

நாரந்தனை எட்டாம்கட்டைப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் சரவணை நாரந்தனை, பள்ளம்புலம் பகுதிகளை நோக்கி நேற்றுப் பகல் முழுவதும் ஷெல் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-125]

## மடு அகதிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தகர்கள், கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் எனப் பல தரப்பட்ட மக்களின் அணிவகுப்புகள் பேரணியில் இடம் பெற்றன.

பேரணியில் சென்றோர் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பினர்.

பேரணியின் முடிவில் மேதினப் பொதுக் கூட்டமும் கலாசார சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [உ]

## இன்று...

தீவுப் பகுதி மக்களுக்கான தபால்கள் யாழ். பிரதம தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் அல்லைப்பிட்டி உப [illegible] தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

# இலங்கைக்கு ரூ. 960 கோடி நிதியுதவி கிடைக்கும்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

கொழும்பு, மே 3

ஆசிய அபிவிருத்தி வங்கி இவ்வாண்டு இலங்கைக்கு சுமார் 960 கோடி ரூபாவை [24 கோடி டொலர்] நிதி உதவியாக வழங்க இணங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடா - வான்கூவாரில் நடந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டதாக— அக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் டி. பி விஜேதுங்கா அமைச்சரவைக்குத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 19 கோடி 60 லட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியிருந்தது.

இத்தகவல்களை அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா நேற்று வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கும் இந்த நிதி உதவி தெற்கில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சொன்னார். [ஓ-எ]

# மதகுரு மீது நடவடிக்கை; பொதுநிலையினர் அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவரிடம் இருந்து குருத்துவம் பணிகள் வாபஸ் பெறப் பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இத் தண்டனை வழங்கப்பட்ட விதம் குறித்து பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி அதி. வண. கலாநிதி பிராங்கொயிஸ் பாக்கியு அவர்களிடம் அதிருப்தி தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிறிஸ்தவப் பொது நிலையினர் முன்னணி, பாப்பரசரின் பிரதிநிதிக்கு இது சம்பந்தமாக அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில்—

குறிப்பிட்ட மதகுருவுக்கு தண்டனை வழங்கப்பட்ட விதம்குறித்து யாழ் கத்தோலிக்கப் பொது நிலையினர் கவலை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குருத்துவப் பணிகள் வாபஸ் பெறப்பட்ட மதகுரு. அண்மையில் சர்வமதப் பிரார்த்தனை ஒன்றில் பங்கு பற்றி இருந்தார் எனவும் அந்த மகஜரில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. [அ]

## இடம் பெயர்ந்த .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று பெரிய முகாம்களை அமைப்பதற்கான நிலப் பிரதேசத்தை தெரிவு செய்யுமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ் அரச அதிபரைக் கேட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேற்படி மூன்று முகாம்களை நிரந்தரமாக அமைப்பதற்கு இடங்களைத் தெரிவு செய்வதில் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களின் உதவியுடன் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் — பதில் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். [ஓ-5]

## பாடசாலைகள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாளர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

மே மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடத்தப்படாத பத்துப் பாடசாலை நாட்களையும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தி ஈடு செய்ய முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். [ஓ]

## மட்டக்களப்பு...

அறிவிக்கப்படுகிறது.

நகரில் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஜி. சி. ஈ உயர்தர விசேட பரீட்சையும் குழம்பி உள்ளது.

தலை இல்லாத முண்டங்களைக் கண்டதும் நகரில் கடைகள் திடீர் திடீரென மூடப்படுகின்றன. மக்கள் வெளியே செல்ல அஞ்சி வீடுகளுக்குள் முடங்கி விடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-உ-5]

## கைது

யாழ்ப்பாணம், மே 3

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்பு மாவட்டம் புதுமனைப் பகுதியில் பொருள்களைக் கொள்முதல் செய்ய 10 ஆயிரம் ரூபா பணத்துடன் நகருக்குச் சென்ற திருமால் என்பவரை இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து கைது செய்தனர். இவர் நேற்றுவரை விடுவிக்கப்படவில்லை. [உ]

## மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரம் ஆறுமுகம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியில் வசித்து வந்தவருமான திருமதி சிதம்பரம் ஆறுமுகம் காலமானார். இவர் காலஞ்சென்ற கோவிந்தர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் முருகேசு [இளைப்பாறிய தபாலதிபர், வண்ணார்பண்ணை. கந்தளாய்] அவர்களின் அன்புத்தாயாரும் சிவசோதியம்மாவின் அன்பு மாமியாரும், ரவீந்திரன் [எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்] நந்தகுமார் [இரண்டாம் வருடம், விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்], சிறீதரன் [யாழ் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [3-5-91] மூன்று மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ஆ. முருகேசு

[16539]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 05 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org